








# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 27 16.07.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## ராமானுஜ மத கருத்துக்கள்
## உலகப்படைப்பு

1. இந்த உலகங்களின் படைப்புக்குக் காரணம் பர-ப்ரஹ்மம் ஆகும்; ஸ்ரீமந்நாராயணன்தான் அந்த பரப்ரஹ்மம்.

2. காரணம் என்பது இருவிதம் -உபாதாநகாரணம், நிமித்தகாரணம் என்று.

3. உபாதாநகாரணம் என்பது படைக்கப்படும் மூலப்பொருள்; (உ.ம்) துணி உண்டாவதற்கு மூல-பொருள் நூல் ஆகும்; அதுதான் உபா-தாநகாரணம்.

4. நிமித்தகாரணம் என்பது பொருளை உண்டாக்குபவர்; (உ.ம்) துணி-யிலிருந்து நூலை உண்டாக்குபவர் நெசவாளி; அவர்தான் நிமித்த-காரணம்.

5. உலகத்துக்கு ப்ரஹ்மம்தான் உபாதாநகாரணம்; அதுவேதான் நிமித்த காரணம்.

6. படைப்புக்கு முன் ப்ரளய-காலத்தில் ப்ரஹ்மம் மட்டும் இருந்தது; வேறு எதுவும் இல்லை என வேதம் அடிக்கடி சொல்கிறது.

7. அப்போதும், சேதந-அசேதந-பொருள்கள் இருந்தன; ஆனால், அவை மிக ஸூக்ஷ்மமாக (நுண்ணியவையாக), பிரித்து தெரிந்து கொள்ள முடியாதபடி இருந்தன. ப்ரஹ்மத்தை விட்டு பிரித்து அறிய முடியாதபடி ப்ரஹ்மத்துடன் ஒன்றி இருந்தன; தனித்து இல்லை; அதை வைத்து அவை இல்லை என வேதம் கணக்காக்குகிறது.

8. ப்ரஹ்மம் ஆனது, அவற்றின் உள்ளே ஆத்மாவாக இருந்தது; அத-னால், அந்த ஸூக்ஷ்மமான சேதந அசேதநங்களுடன் கூடிய ப்ரஹ்மம் காரணம் ஆகும்; அதுவே படைப்பின் மூலப்பொருள் ஆன உபாதானகாரணம் ஆகும்.

9. பின்னர் ப்ரஹ்மம், 'நான் பல பொருளாக ஆவேன்" என்று ஸங்கல்பம் செய்தது; அந்த ஸூக்ஷமமான பொருள்களை ஸ்தூலமாக ஆக்கியது; (நுண்ணிய பொருள்களை பெரியவை ஆக்கியது); அதுதான் படைப்பு ஆகும்.

10. ப்ரஹ்மம் ஆனது, தானும், அந்த ஸ்தூலமான பொருள்களுக்குள் ஆத்மாவாக ஆனது; ஆக, ஸ்தூலமான சேதந-அசேதநங்களுடன் கூடிய ப்ரஹ்மம்தான் கார்யம் (உண்டாகும் பொருள்) ஆகும்.

11. ஆக, ஸூக்ஷ்மமான சேதந அசேதநங்களுடன் கூடிய ப்ரஹ்மம் காரணம் ஆகும்; ஸ்தூலமான சேதந அசேதநங்களுடன் கூடிய ப்ரஹ்மம்தான் கார்யம் (உண்டாகும் பொருள்) ஆகும்; இதனால், ப்ரஹ்மமே காரணம்; ப்ரஹ்மமே கார்யம் என்பர்.

12. படைப்பில் முதலில் நடந்தது ஸமஷ்டி ஸ்ருஷ்டி எனப்படும்; பின்னர் நடந்தது வ்யஷ்டி ஸ்ருஷ்டி எனப்படும்.

13. அசேதன-பொருள்களுக்கு மூலகாரணமாக முதலில் இருந்த பொருளுக்கு ப்ரக்ருதி என்று பெயர்; அது எங்கும் பரவியது; ஸத்த்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணம் கொண்டது.

14. ப்ரக்ருதியிலிருந்து 'மஹத்' என்ற பொருள் உண்டாயிற்று; நமக்கு திடமான உறுதியான எண்ணங்கள் வருவதற்கு இது துணை புரிகிறது.

*15. மஹத்திலிருந்து 'அஹங்காரம்' என்ற பொருள் உண்டாயிற்று: நமக்கு ஸரீரத்தையே நான் எனப்படும் ஆத்மாவாக தோன்றச் செய்கிறது; அதனால்தான் அஹங்காரம் என்று பெயர்.*

*16. அஹங்காரத்திலிருந்து பதினொன்று இந்த்ரியங்களும், ஐந்து தந்-மாத்ரங்களும் தோன்றின.*

*17. தந்மாத்ரங்கள் ஐந்திலிருந்து ஆகாஸம், வாயு, தீ, நீர், நிலம் என்றிவை வரிசையாகத் தோன்றின; இவையே பஞ்சபூதங்கள் ஆகும்.*

*18. இதுவரையான படைப்புக்கு ஸமஷ்டி ஸ்ருஷ்டி என்று பெயர்; இனி வ்யஷ்டி-ஸ்ருஷ்டி*

*19. பஞ்சபூதங்கள் தனித்தனியாக இருந்தால் உபயோகப்படாது; எனவே, இவற்றை ஒவ்வொன்றையும் கலந்து ஐந்திலும் ஐந்தும் கலந்திருக்கும்படி ப்ரஹ்மம் செய்தது; இதற்கு பஞ்சீகரணம் என்று பெயர்.*

*20. இவற்றுக்குள் ஜீவனுடன் கூட ப்ரஹ்மம் தானே உள்புகுந்தது; அவற்றை உரு வமும், பெயரும் உடையனவாகச் செய்தது; இதற்கு நாமரூப வ்யாகரணம் என்று பெயர்; அதாவது பெயர்-உரு-கூடியதாக அமைத்தல் என்று அர்த்தம்.*

*21. இதுதான் வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஆகும். இதில்தான் உலகங்கள் தோன்றின; முதலில் ஒரு உலகில் நான்முக-ப்ரஹ்மா தோன்றினார்; அவரைக் கொண்டு பிற பொருள்களை ப்ரஹ்மம் படைத்தது.*

*22. ப்ரஹ்மா என்பவர் நான்முகன்; ப்ரஹ்மம் என்பவர் பகவான் நாராயணன்; இருவரும் வேறானவர்கள்: சொல்லும்போது கவனம் தேவை.*

*23. நான்முகனும் நிமித்த காரணம் மட்டுமே; உபாதானகாரணம் அல்ல; அதாவது பொருள்களைப் படைத்து, அவற்றுக்குள் அந்-தர்யாமியாக உள்ளிருப்பவன் அல்ல; ப்ரஹ்மம் அப்படி உள்ளே அந்தர்யாமியாக இருக்கும்; எனவே, அதுவே உபாதாந-காரணம்.*

*24. நான்முகனும் தனித்து நிமித்த-காரணம் அல்ல; அவனுக்குள் பர-மாத்மாவான பர-ப்ரஹ்மம் உள்ளது; அதுதான் நிமித்த-காரணம்.*

*25. காரணமும் காரியமும் ஒரே பொருள்தான்; ஒருபொருளே ஒரு நிலையில் காரணமாகிறது; அதுவே, வேறொரு நிலையில் கார்யபொருள் ஆகிறது; (உ.ம்) மண் என்னும் பொருள்தான் பானை ஆகிறது; தங்கம்தான் மோதிரம் ஆகிறது.*

*26. அதுபோல காரணமான ப்ரஹ்மம்தான் கார்ய-பொருளான ப்ரஹ்-மமாக ஆகிறது; அதாவது காரண-பொருளுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் ப்ரஹ்மம் காரணம்; உண்டாகும் கார்ய பொருளுக்குள் அந்தர்யாமியாக ஆகும் ப்ரஹ்மம் கார்யம் ஆகும்.*

*.....நன்றி: நாவல்பாக்கம் வாசுதேவாசாரியார்*

**************************************************************************